ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

தற்காலத்தில் எல்லாப்பிராணிகளும் எக்காரணம்பற்றியோ, ஸ்வதர்மத்தை விடுவதிலும் பிறர் தர்மத்தைப் பிரியப்பட்டு நடத்திவருவதிலும் ருசியுள்ளவர்களாய்விட்டார்கள். இதுவே மேன்மையடைய வழியென்றும் நினைக்கிறார்கள். ஆனால் இவர்கள் நினைத்திருக்கிறபடி அதிலிருந்து க்ஷேமமுண்டாவதாகத் தெரியவில்லை. அவரவர்கள் தர்மத்தை அவரவர்சள் நடத்திவந்த முன்காலத்தில் எல்லோரும் சுகமாகவே வாழ்ந்துவந்தார்களெனச் சரித்திர ஆராய்ச்சியிலிருந்து தெரியவருகிறது. அதனால் சாஸ்திரம் விதிப்பதே சுகத்திற்கு ஹேதுவென்பது நன்றாய் அனுபவத்திற்குவருகிறது. பெரியோர்கள் போனவழியும் சரியானவழியென்றும் திடப்படுகிறது இதைச்சொன்னால் எவன் கேழ்ப்பான். அனுபவித்தும் தெரியவில்லையென்றால் அது காலவித்தியாஸமேயொழிய வேறில்லை, அதனால் தற்போது பிராணிகளுக்குப் பிழைக்கும்வழிகூட ஒழுங்காகக்காணப்படவில்லை. பிழைக்க வழியறியாமல் பசியால் வருந்திக் கஷ்டப்படுகையில் புண்ணியபாபம் எங்கே தெரியப்போகிறது: நினைத்தபடியெல்லாம் நடத்திவிடுவதே நன்மைக்கு வழியென்று எண்ணிக்கொண்டு ப்ரவிருத்திக்கிறார்கள். பின்னிட்டுப் பலன் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள், அன்யமதஸ்தர்களை அன்யமதஸம்பந்தமான கார்யங்களில் கெவனம் செலுத்தும்படி கற்பிக்கிறார்கள். உதாரணமாக:— ஹிந்துக்களின் தேவாலயங்களில் கிரிஸ்தவர்களைக் கமிட்டிமெம்பராகச் சேர்த்திருக்கிறார்களாம். இது சாஸ்திரத்தோடு முறண்படுவதோடு தற்காலத்திய ராஜாங்க சட்டத்திற்கு விரோதமாக இருக்கின்றது. இப்படி விரோதப்பட்ட கார்யத்தைச் செய்யத்துணிந்துவிட்டால் நன்மையெப்படி கிடைக்கும். ஹிந்துமதக் கொள்கைப்படி ஹிந்துவின் ஆலயங்களில் நாள் நக்ஷத்திரங்களின் ஒரு விசேஷம் நடத்தவேண்டுமென்பதாயிருந்தால் இதன் ரஹஸ்யத்தை அறிந்துகொள்ளாத கிரஸ்தவர்கள் இதை அனாவசியமென்பார்கள். அப்படிக் கிரஸ்தவர்களுடைய கோவில்களில் ஹிந்துக்களை விசாரணை கர்த்தாக்களாக இருக்க சம்மதிப்பார்களா? மற்றுமுள்ள மஹம்மதியர்கள்தான் சம்மதிப்பார்களா? இப்படி பிறமதஸ்தர்கள் ஹிந்துக்களின் தேவாலங்களில் சம்பந்தப்பட்டு ஒவ்வொருவிசேஷங்களாகக் குறைத்துக் கடைசியில் கோவில்களையே பாழாக்கிவிடுகிறார்கள். இம்மாதிரி நடத்தப்பட்டதில் பெரிய பெரிய ஆலயங்களெல்லாம் பாழாகிவிட்டன. கெங்கைகொண்டசோழபுரம் கோவிலின் பிரகார மதில் சுவரை இடித்துக் கொள்ளிடம் பாலம் கட்டினார்களாம். இதுபோலவே பலகோவில்கள் இடிபட்டுக்கிடக்கின்றன. இப்படிக் கிரிஸ்தவர் கோவில் பாழாக்கிக் கிடக்க அவர்கள் பார்த்திருப்பார்களா? ஹிந்து மதத்தில் ஒரு கட்டுப்பாடுமில்லாமல் சீர் குலைந்திருப்பதைக்கண்டுதான் சீர்திருத்தத்திற்குப் புறப்படுகிறவர்கள் ஹிந்துமதத்தைக் கண்டபடி கெடுக்கத் தலையிடுகிறார்கள். ஹிந்துக்களிலும் சிலர் அக்கூட்டத்தில் கலந்துகொண்டு பிறமதஸ்தர் ஒன்று சொன்னால் ஹிந்துவாயிருப்பவர் பத்து சொல்லுகிறார். இப்படியெல்லாம் போவதற்கு இடங்கொடுக்காமல் யாவரும் ஸ்வதர்மத்தையாதரித்துப் பரிபாலித்து வருவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்,
ப்ரஜாபதி-ஹூ ஆவணிமீ சஉ

பிராமணன் பிழைக்கும் வழி

பிராமணன் அந்தஜாதியிற் பிறந்ததற்காகவேகடமையென்று செய்யவேண்டியவை மூன்று வேதாத்யயனம், யாகம், தானம். இவைகளைச் சம்பூர்ணமாகவோ, சக்திக்கேற்றவாறாகவே கண்டிப்பாய் செய்தே தீரவேண்டும். இவைகளைச்செய்யத் தற்காலத்தில் பலர் முன்வருவதில்லை. சாஸ்திரவிதி அப்படி இருக்கின்றதே யென்று சொன்னால்—இவையெல்லாம் பிழைக்கும்வழி யாமோ எனக் கேழ்க்கிறார்கள் இவைகளைப் பிழைக்கும் வழியாகச் சாஸ்திரம் கருதவில்லை ஆனால் ஜன்மம் கடையேறும் வழியாகக் கருதுகின்றது. சிலர் இவைகளையே பிழைக்கும்வழியாகவும் வைத்துக் கொள்ள நினைக்கிறார்கள், அது சாஸ்திரத்தின் கருத்துக்கு மாறுதலாயிருப்பதால் நல்ல நினைப்பல்ல சாஸ்திரம் பிராமணர்களுக்கு ஜீவனோபாயத்தைத் தெரிவிக்காமலிருக்கவில்லை. கடமைக்காகச் செய்யவேண்டிய மேல்காட்டிய முத்தொழிலை யொட்டியே வேறு முத்தொழிலைப் பிழைக்கும்வழியாகக் கூறுகின்றது. அவை யாவன—அத்தியயனம் செய்வித்தல், யாகம் செய்வித்தல், கொடுப்பதை வாங்குதல் இவைகளாம் அத்யயனம் செய்துவைத்தால் அந்தச்சிஷ்யன் குருதக்ஷிணையாக ஏதேனும் கொடுப்பானல்லவா அதைக்கொண்டு பிழைக்கலாம் அது தற்காலத்தில் எங்கும் காணப்படவில்லை. எந்தச்சிஷ்யனாவது குரு சுசுரூஷை செய்து வேதாப்பியாஸத்தை முடித்துக்கொண்டு குருதக்ஷிணை கொடுத்ததாகக் காண்கிறோமா? அல்லது கேட்கிறோமா? பிறர் ஏற்படுத்திய பாடசாலையிற் சேர்ந்து புஜித்துவிட்டு வேதமோதும் பிள்ளைகள் எங்கே குருதக்ஷிணை கொடுக்கப்போகிறார்கள். பிரபுக்களிடம்சென்று குருதக்ஷிணைக்காக யாசித்தால் கௌத்ஸரென்னும் மஹரிஷிக்கு ரகுமஹாராஜா கொடுத்ததுபோல் எந்தப்பிரபு தாராளமான பொருளைக் கொடுக்கப்போகிறார். கொடுத்தாலும்

அப்படியே அதை எவன்கொடுப்பான். தலைவிரி கோலமாய்ப் பொருளாசை பிடித்தாடுமிக்காலத்தில் அதெல்லாம் ஸம்பவிக்கக் கூடியதல்ல. இவைகளைத்தவிர வேறுபிழைக்கும்வழி கூறப்படு கின்றதா என்று பார்த்தால் கூறப்படுகின்றது. அவையாவன ருதம், அமிருதம், மிருதம், பிரமிருதம், ஸத்தியா நிருதம் சுவ விருத்தி, ஆக ஆறுவகைப்பட்டவைகளாம். ருதமென்பது ஒன் றென்றாய்க்காடுகளிலும், கழனிகளிலும் விழுந்துகிடக்கும் தான் யாதிகளைப் பொருக்கிக்கொண்டுவந்து பிழைப்பதாம். அமிருத மென்பது—ஒருவரையும் ஒன்றுங்கேட்டு யாசிக்காமல் கிடைத்த தைக்கொண்டு காலக்ஷேபம்செய்வதாகும். இவ்விரண்டும் தற் காலத்தில் நேருவதில்லை. மிருதமென்பது யாசித்துப்பிழைப்பதாம் அதுவுமிந்தக்காலத்தில் செத்த பிழைப்பு என்று அதன் பெய ரையே உருதிப்படுத்துகிறது. அதனுல் அதுவுமொரு சரியான வழியாகாது. பிரமிருதமென்பது உழுது பயிரிடுவதாகும். அது ஸம்பவிக்கலாம். அனேகர் அத்தொழிலையாசிரயித்திருக்கிறார்கள். ஆனல் அதில் வெகுகஷ்டமிருக்கிறது. பிராமணன் மேழியைப் பிடித்து உழக்கூடாதென்று சாஸ்திரம் சொல்லுவதால் அதை சுயமாக அவன் செய்யமுடியவில்லை. பிறன் கையைப்பார்க்கும் பொழுது அவன் படாதபாடெல்லாம் படுத்திவிடுகிறன். அவன் பாதி பற்றிக்கொண்டாலும் நாம் பாதியாவதுகொண்டுவரலாமே யென்று துணிந்து பலர் அதை ஆசிரயித்திருக்கிறார்கள். ஐந்தா வதாகிய ஸத்தியாநிருதமென்பது வியாபாரம் செய்வதாகும். அதுவும் சாஸ்திரப்படி நடத்தப்பட்டால் பிழைப்பதற்குப்போ தாது. எப்படியாயினுமாகுக. துணிந்து அதிலேயே இரங்கு வோமென்று பலர் அதிலும் நுழைந்திருக்கிறார்கள். ஆருவது 'சுவவிருத்தி' (நாய்த்தொழில்) ஸேவை எனப்படும். அது எவ்வி தத்திலும் நிஷேதிக்கப்படுகிறது. ஆயினும் அதிலேயே பெரும் பாலும் பலர் இரங்கி இருக்கிறார்கள். மாட்டிக்கொண்டு கஷ்டப் படுகிறார்கள். என்ன கஷ்டம் நேர்ந்தாலும் நேரட்டுமென்றும், சாஸ்திரம் நிஷேதத்தாலும் நிஷேதிக்கட்டுமென்றும் துணிந்தா லும் தற்போது பிராமணர்களுக்கு இந்த ஸேவைத்தொழிலையும் கொடுக்கக்கூடாதென்று சட்டமும் பிறந்துவிட்டது. ஆங்காங்கு வேலையில் அமர்ந்தவர்களை வேலையைவிட்டு வீட்டுக்கு விரட்டு கிறார்கள். வேறு சிலர் பல இழிவுதொழிலையும் கைப்பற்றி விட்

டார்கள். காப்பிக்கிளப்பு, சாப்பாட்டுக்கிளப்பு, பலஹாரக்கடை முதலியவைகளையும் வைக்க ஆரம்பித்து விட்டார்கள். "உள்ளியைத்தின்னும் வியாதி தொலையவில்லை." என்ற நியாயமாக அவ்வளவு இழிவுதொழிலையாசிரயித்தும் தாரித்திரியம் தொலையவில்லை. இப்படி பிழைப்புக்கு வழியில்லாமல் திண்டாடும் ஸமயத்தில் விவாஹம் முதலிய சுபசோபனாதிகளில், வரதக்ஷிணை, சம்பந்தி வரவேற்பு, விருந்து, காபபிக்குடி முதலிய பல வழிகளில் சிலவை அதிகப்படுத்திக்கொண்டு அதைக்குறைத்துக்கொள்வதே பிழைக்கும் வழியிற்சிறந்தது. அதற்குவேண்டிய வழியைத்தேடி யாவரும் சுகப்படுவார்களாக. சுபம்.

பத்திராதிபர்,

புராண விமர்சம்

(645-வது பக்கத்தொடர்ச்சி)

முன்னொருக்கால் "கயாதுவின்" ஹிரண்ணியகசிபுவின் புத்திரனை பிறந்தவுடன் கொன்றுவிடவேண்டுமென்று இந்திரன் தீர்மானித்து ஹிரண்ணியன் தவம்செய்யபோன சமயத்தில் கர்ப்பிணியான கயாதுவைக் கொண்டுபோனான். நடுவழியில் நாரதர் சந்தித்து இந்திரனிடமிருந்து கயாதுவை தன்னுடன் கூட்டிக்கொண்டுபோய் திவ்ய பக்தனான பிரஹ்லாதனை பிரஸவிக்கும்வரை தன் ஆசிரமத்தில் வைத்து ரக்ஷித்தார். இந்திரன் கொல்லமுயன்றது பலிக்கவில்லை. இதனாலும் தெய்வசங்கல்பத்தை தேவர்களும் அறியமாட்டார்களென்பது விளங்கிற்று.

இராவணன் ஒருசமயம் பிரும்மாவிடம்சென்று தனக்கு யாரால் மரணமென்று கேட்டான். அப்போது பிரும்மாவானவர் தசரதருக்கும், கௌசலைக்கும் பிறக்கும் சிசுவால் உனக்கு மரணம்வரும். ஆனால் இவ்விருவருக்கும் இன்றுமுதல் ஐந்தாவது தினத்தில் விவாஹம் நடைபெறப்போகிறது என்றுரைத்தார். அதைக்கேட்ட ராவணன் அப்பொழுதே தசரதரைக்கொல்ல வெண்ணி அயோத்திமாநகரம் சென்றான். தசரதர் சுமந்திரர்

என்ற மந்திரியுடன் 'சாயூ நதியில்' ஜலக்கிரீடை செய்வதாக அறிந்தான். அவ்விடம்சென்று போர்புரிந்து தோணியை உடைத்து தசரதரையும் சுமந்திரர் என்ற மந்திரியையும் ஜலத்தில் மூழ்கச் செய்து காரியம் ஜெயம்பெற்றுவிட்டதாக எண்ணிப்போனான். ஆனால் தெய்வகதியாய் அவர்களுக்கு ஓர் பலகைத்துண்டு ஆதாரமாகக்கிடைத்தது. அதைப்பற்றிக்கொண்டு சாயூநதியின் வழியாய்க் கங்காநதியை அடைந்தார்கள். அதிலிருந்தும் கரையற்ற சமுத்திரத்தையும் அடைந்துவிட்டார்கள். ராவணன் தசரதனை முடித்துவிட்டதாகவெண்ணி, கோசலதேசம்சென்று அந்த ராஜனை ஜெயித்து கௌசல்வியையை கிரகித்தான். இவளை எவ்விதத்தால்வைத்து ருட்சிப்பதென்று ஆலோசித்து ஓர் திமிங்கிலத்தினிடத்தில் பெட்டியில்வைத்து ஒப்புவித்து நான் கேட்கும்போது திரும்பத்தரவேணுமென்று உறுதிகூறிக் கொடுத்துவிட்டு ஜயம் பெற்றுவிட்டதாக நினைத்துப்போனான். திமிங்கலம் ருட்சித்து வரும்போது மற்றோர் திமிங்கலத்திற்கும் இதற்கும் யுத்தமொன்று நேரிட்டது. இத்திமிங்கலம் பெட்டியை ஓர் கரையில் வைத்துவிட்டு சண்டைசெய்யப் போனபோது தெய்வகதியால் காற்றின் உதவியால் "தசரதரும், மந்திரியும்" அந்தக்கரையிலேயே சேர்க்கப்பட்டார்கள். அவ்விடத்தில் ஓர் பெட்டிமாத்ரம் இருக்கக்கண்டு, அப்பெட்டியைத் திறந்துபார்க்கும்போது அதில் "கௌசல்வியை" இருக்கக்கண்டு சங்கதியை அவள்மூலமாய் அறிந்துகொண்டு தசரதர் காந்தர்வ விவாஹப்படி விவாஹம் செய்துகொண்டார். இச்சமயமே முன் விவாஹத்திற்கு தீர்மானித்திருந்த முகூர்த்தமாம். அச்சமயத்திலேயே தெய்வஸங்கல்பப்படி விவாஹம் இருவருக்கும் நடைபெறவும் செய்தது' பிறகு இம்மூன்று பெயர்களும் அப்பெட்டிக்குள் இருந்துகொண்டு மூடிக்கொண்டார்கள் திமிங்கலம் சத்துருவை ஜெயித்துவிட்டு திரும்ப பெட்டியை எடுத்துக்கொண்டு ஜலத்தில் சஞ்சரித்து வந்தது. இந்தசமயம் பிரும்மாவை அழைத்து ராவணன் சுவாமி தாங்கள் சொல்லிய தசரதரின் கல்யாணம் நடைபெறவில்லை, கௌசல்வியை நான்மிக பத்திரப்படுத்தி விட்டேன். தசரதனையும் முடித்துவிட்டேன். ஆதலால் தாங்கள்சொல் வீணாச்சுதுஎன்றான் அதற்கு பிரும்மன் ஹே ராவணா என்வார்த்தை வீணாகவில்லை, சத்தியமாகவே முடிந்தது என்று சொல்லவே, ராவணன் திமிங்

லத்தினிடமிருந்து பெட்டியை வரவழைத்துப் பார்த்தான் அதில் மூன்று பெயர்கள் இருக்கக்கண்டு, இப்பவே இவர்களை வெட்டிவிட வேண்டுமென்று முயன்றான். அப்போது பிரும்ம தேவன் ராவணா நீ நினைத்தபடி ஒரு பெண்இருந்தபெட்டியில் மூன்றுபெயர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் ஏன் இப் பொழுதே பிள்ளையைப் பெறமாட்டார்கள். அப்பிள்ளையும் ஏன் உன்னை இப்பொழுதே கொல்லமாட்டாது. ஆனால் உனக்கு தற்காலம் மரணம் வரமாட்டாது, நீ இப்பொழுதே வெட்டத் துணிந்தால், ஒருசமயம் பின்னால் வரப்போகும் மரணத்தை இப்பவே அடைந்துவிடுவாய் விதியைவெல்ல யாராலும் முடியாது ஆகையால் இவர்களை அயோத்தியில் கொண்டு சேர்த்துவிட்டு சுகமாயிரு பிறகு நடக்க நடக்கப் பார்த்துக்கொள்வோம் அதற் காக இப்பொழுதே மிருத்தியுவை வரவழைத்துக்கொள்ளாதே என்று சமாதானம்செய்து பெட்டியை அயோத்தியில் சேர்த்து விட்டு பிரும்மதேவன் சுவஸ்தானம் சென்றார். இதனால் தெய்வ சங்கல்பத்தை மாற்ற மிக தவமகிமைபெற்றவர்களாலும் சாத் தியமில்லை என்பதுவிளங்கிற்று.

4. கம்சனென்றவன் ஏதோ காரணத்தால் தேவகியின்பிரஜை யைக் கொல்லப்பல ஏற்பாடுகளும் மிக உறுதியாக செய்திருந் தான் ஆனால் அம்முயற்சிகள் யாவும் வீணாய் தெய்வ சங்கல்ப் பப்படியே பகவான் அவதரித்து தனது ஸங்கல்பத்தை முடிக்கவில்லையா? இதனாலும் பரமேசுவரனது ஸங்கற்பமே பெரி தெனத்தெரிகிறது.

5. முன்னொருசமயம் பரீட்சித்துராஜனை ஏழாவதுநாளில் சர்ப்பம் கடிக்கவேணுமென்று ரிஷி சாபம்பிறந்தது. அதைத் தடுக்க ஏழுமேடைக்கட்டிடத்தில் மிக சாமர்த்தியமாய் மணி, மந்திர, சித்தர்களுடன் வசித்துவந்தான். 7 வதுநாளில் தட்ச கன் தனது பரிவாரங்களை பிராமண வேஷமாக்கி அனேக பழ வர்க்கங்களை கையிலேந்தி ராஜனைப்பார்க்கபோகும் எண்ணத் துடன் வந்த பரிவாரங்களின் கையிலிருந்தபழங்களில் தான் ஒரு சிறு கீடரூபமாக இருந்துகொண்டு பரிட்சித்து ராஜனைக் கடித்துக்கொன்றான் இதனாலும் முன்கருத்தே திடப்படுகிறது.

6. ஸகான் என்ற ராஜனை கர்ப்பத்தில்வைத்துக் கொல்ல வேணுமென்று விஷம் கொடுத்தார்கள் ஆனால் தெய்வ சங்கல்ப்பப்படியே விஷத்துடன் பிறந்தார். கரமென்றால் விஷம் அதோடேபிறந்தவர்—ஸகார் ஸகான் என்ற நாமம் வந்தது இவரே சூரியவம்சத்தில் மிக புகழ்பெற்றவராக விருந்தார். சமுத்திரமானது இவரது புத்திரர்களால் வெட்டப்பட்டது இச்சரித்திரத்தினாலும் புருஷப்ரயத்தினம் பலிக்காதென்றாகிறது.

7. துரியோதனாதிகள் பாண்டவர்களை, அழிக்கக் கருதி பல சூட்சிகள் அனேகதடவைகளில் செய்தும் அவைகளொன்றும், பலிக்காமல் பாண்டவர்கள் தெய்வசங்கல்பப்படி பாக்கியவான்களாக விளங்கினார்கள், இக்காரணத்தாலும், மனிதனின் முயற்சியால் தெய்வ சங்கல்ப்பத்தை மாற்ற முடியாதென்பது விளங்கிற்று. இம்மாதிரியான பல சரித்திரங்களின் மூலமாய் நாம் தெரிந்துகொள்வதெனனவெனில் மனிதன் நினைத்ததொன்றும் நடைபெறமாட்டாது. தன் பலத்தையே நம்பி ஈசனைமறந்து ராஜ்ஜியமாண்டுவந்த வேனன் ஹிரண்ணியன் இவர்களின் சரித்திரமானது நவீன மேதாவிகளுக்கு ஓர் திவ்விய உபதேசமாகுமென்பதில் தடையில்லை. இம்மாதிரி விளங்கிவரும் தெய்வசக்தியைப் புகழ்கின்ற புராணச் சரித்திரங்களால் 'தெய்வசங்கல்ப்பத்தைமாற்றி யமைக்கக்கருதும் மகான்களும் மாசற்ற தெய்வ மார்க்கத்தைக் கடைபிடித்து முயற்சித்துவர தெய்வம் திடபுத்தியளிக்குமாக　　　　சுபம்

உலகசார விளக்கமும் உத்சவமும்

சர்வமதத்திலும் ஈசனொருவனுண்டென்பதும் மதக்கொள்கையின்படி அவ்வீசனை உயர்வான ஸ்தானாதிகளில் வைத்து மிக பக்திபூர்வமாக தினமும் ஆராதித்துவருவதும் வழக்கமான ஓர் காரியமாம் இந்துமதத்தில் மாத்திரம் சிலர் துடங்கி ஈசனையும் அவமதிக்கத்தலைப்பட்டு விட்டார்கள். இவ்வீசானுக்கிரகத்திற்காக தேவாலயாதிகளில் 'நடைபெறும் ஆராதனாதிகள் அனாவசியமென எண்ணி உத்ஸவகாலங்களில் தங்களது குறுகிய புத்தி

யீனத்தன்மையை அநுஷ்டானத்தில் காண்பிவித்து வருகிறார்கள், சமீபகாலத்தில் தூத்துக்குடியில் நடந்த ரதோத்சவத்தில் காந்தியின் உருவப்படத்தை ரதத்தில் வைத்தால்தான் ரதத்தை இழுப்போமென்று தொண்டர்கள் சொல்ல. தேவாலய அதிகாரிகள் அதற்கு இடமளிக்காததால் வாக்குவாதம் பிறந்து தொண்டர்கள் முரண்டினார்கள். எவ்விதமெனில் ரதத்தில் பூசைசெய்யக் கூடியவர்களும், சங்கம் பேரிநாகஸ்வரம் முதலிய வாத்தியகோஷம் செய்கிறவர்களும் ஏறி இருக்கலாமென்றால் என் மகாத்மாவின் படம் இருக்கக்கூடாதென வாதித்தார்களாம் அந்தோ இவர்களின் மூடநம்பிக்கைக்கு அளவேயில்லை. காந்திக்கு இக்காரியம் இஷ்டமா, இஷ்டமில்லையா வென்று யார் அறிவார்கள், மகிமையான கீர்த்தியும் இது தொண்டர்களின் நிமித்தமாய் மாய்ந்துவிடுகிறது பூசைசெய்யக்கூடியவர்கள் ஏறலாமாவென்றால் இவர்கள் தனிமையாக ஈசனைத்தொட்டு கைங்கரியஞ்செய்ய ஜனசம்மதமான ஆக்ஞைபெற்றவர்கள் அதுபோலவே சங்கம் முதலிய வாத்தியகோஷம் செய்கிறவர்களுமாம் இரதத்தில் ஏறினதினால் உயர்ந்தவர்களென்றும் ஏறாதவர்கள் தனித்தவர்களென்றும் ஆய்விடுமா இது ஈசகைங்கரியத் தொழிலைக்கொண்டுவந்த ஸ்தானமல்லவா இவர்களுக்கு ஈசனைவைத்து ஏற்பட்ட ஸ்தானத்திற்கு அச்சமயம் உசிதமேதவிறவேறில்லை சில்ப்பாசாரியொருவன் பிம்பம் செய்து பூசிக்கிறான், முதலில் தான் ப்ரதிஷ்டை செய்துபிறகு ஆகமாதி சாஸ்திரப்படி பிரதிஷ்டையானது பிராமணர்களால் செய்யப்படுகிறது. முதலில்பிரதிஷ்டை செய்தவனானபடியால் நான் எப்பொழுதும் பூசிப்போமென்று ஒரு சில்பிசொல்வதுண்டா? நடப்பதுண்டா? இதையார்ஒப்புக்கொள்வார்கள் பிம்பம் செய்தபோது சில்பிக்சிரியை என்றமரியாதையை அவன்செய்வது அக்காலத்தில்உசிதமாவதும்பிறகு அது கூடாததும் ஆவதுபோலஒவ்வொருகாரியங்களுக்கும் பிரத்தியேக அநுமதிபெற்றவர்களே செய்யக்கூடுமே தவிர எல்லாவற்றையும் ஒருவரே செய்வதென்பது உலகில் வழக்கமில்லை பூசைமுதலிய கைங்கரிய புருஷர்கள் செய்வதுபோல மற்றவர் செய்யக்கூடாது. அதிகாரமுமில்லை அநீதமுமாம் அது சிட்சைக்கு காரணமாகும் அஃதெவ்விதமெனில் கவர்மெண்டு கஜானாவில் தனத்தைக் கையாண்டுவரும் குமஸ்தாவுக்கு 50 ரூபாய் சம்பளம் உண்டு அவனுக்கு கஜானாப்பணங்களை தொட்டு கையாள பிரத்தி

யேகமான அதிகாரமுண்டு. ஆனால் இந்தகுமாஸ்தாவைவிட பல மடங்கு அதிகச்சம்பளம் பெற்றுவரும் முனிசீப் ஒருவர் கஜனுப் பணத்தை கையாளமுடியுமா, கையாள சம்மதிப்பார்களா.

ஆண்டால் சிட்சைஉண்டாகாதா? இதில் பிரத்தியேகமாக ஒவ்வொரு காரியங்களுக்கும் அதிகாரம் கிடைப்பதுதான் முக்கியமாகும். ஒருவன் செய்யும் காரியத்தை மற்றவன் செய்வது அதிக்கிரமம் என்றுகும் குற்றத்திற்கு காரணமுமாம் தவிர தபால் ஆபீசுகளில் உள்ளேவாக்கூடாது என்று வாசலில் ஓர் பலகை எழுதி கட்டப்பட்டிருக்கிறது. இந்தரூல் வெளி மனிதர்களுக்கு ஏற்பட்டதேதவிற அந்தஆபீசில் உள்ளவர்களுக்கு இல்லே. இதை அறியாமல் போஸ்ட்மாஸ்டரும் உள்ளே போகக்கூடாது அவர் போவதானல் ஏன் மற்றவர் போகக்கூடாதென வாதிப்பவர்களே யாராவது ஒப்புக்கொள்வார்களா? அறியாத மூடனென்றே சொல்லுவார்கள் இவைபோன்ற உலக சரித்திரத்தை தொண்டர்கள் சற்று கவனித்திருந்தால் இவ்விவாதத்திற்கே காரணமுண்டாகாது ஆக்ஞைபெற்றவர்கள் இரதத்தில் ஏறிக்கொள்வது குற்றமாகாது என்பது உண்மை. இரதத்தில் ஈசனுடன் காந்தியின் உருவப் படத்தை வைக்கவேணுமென்று சொல்லும் தொண்டர்களின் எண்ணமென்ன, ஈசனும் காந்தியும் ஒன்று என்று— ஈசனே ஒரு விளையாட்டுக்கருவி என்று நினைப்பா, ஈசனின் சந்தோஷத்தைக்ககருதி இந்துமத சாஸ்திரப்படி வெகுகாலமாக அபரிமிதமான பணச்செலவுசெய்து நடத்திவரும் ரதோத்ஸவம் முதலிய தேவகைங்கரியங்கள் அநாகரீகமென்ற உத்தேசமா? யாதோ அறியோம். தொண்டர்கள் பக்குவம் வாாதவர்களான படியால் அவர்களது செய்கையானது நிந்தைக்கும், ஹாஸ்யத்துக்கும், குற்றத்திற்கும் காரணமாகிறது. பக்குவம் வாாத சீடனுல் குருவும் அவதிப்படுவார் என்பது நிச்சயம். உதாரணமாக:-

காட்டில் சிங்கமொன்று ஒருக்கால் காடியை தூக்கி வரும் போது வேடனொருவன் துப்பாக்கியால் சிங்கத்தைக்கொன்றுன். காடி தன் பிராணனே இரக்ஷித்தவனென்று அபிமானத்துடன் அவ் வேடனைக் குருவாக எண்ணி அன்றுமுதல் சரணம் புகுந்து அதுமுதற்கொண்டு நல்ல மாமிசங்களே தினமும் குருவிற்குக் கொடுத்து உதவிசெய்து வரவே, ஒருதினம் வேடகுரு காடி

சீடனின் மடியில் தலைவைத்துப் படுத்தூங்கினன், அச் சமயம் அவ்வேடனின் கடைவாயில்நின்று வழிந்துகொண்டிருந்த உமிழ் நீரைப்பருக ஒருபெருத்த ஈயானது, முகத்தில் வந்துட்கார்ந்தது இதைப்பார்த்தகாடிக்குமனம் பொருக்கவில்லை,,நானிருக்கும்போது எனது குருநாதன்மீது, மிக அற்பனுகிய நீயா உட்கார்ந்துதூக் கத்தைக் கலைப்பது,,சிறிதும் பயமில்லையா, இதோ உனக்கு புத்தி சொல்லுகிறேனென்று கையைஓங்கி பளீரென்று ஈயை அறைந்தது அந்த அடியினுல் வேடகுருவின் கன்னம் சதைந்து, தூக்கமும் போய், துக்கமும்வந்தது.

துஷ்டசீடனுல் குருவுக்குவந்த ஆபத்தைப் பார்க்கும்போது நன்கு பரிசோதித்துத்தான் சீடனை ஒப்புக்கொள்ளவேண்டும்.

தொண்டர் படையில்பலரும் கதராடையால்; தொண்டர் களைதவிர மகாத்மாவைப்போல் மனச்சாந்தி முதலிய குணங்க ளில் தொண்டர்களாகார்கள். இதனுல் பொதுஜனக் கூட்டங்களில் சச்சரவு பிறக்கிறது அதனுல் சாதுக்கள் ஹிம்சிக்கப்படுகிறுர்கள் கடைசியில் தொண்டர்களின் வைராக்கியமும் வீணுகிறது.இம் மாதிரியான சீடர்களை பக்குவமடையச்செய்ய மகாத்மா முயற்சிப் பது முக்கியமான ஓர்காரியம். இல்லையேல் ஆபத்துக்கும் கஷ்ட நஷ்ட ங்களுக்கும் காரணமாகும்; ஏனெனில் சங்கராசாரியஸ்வாமி களுக்கு''ஓர் சீடனிருந்தான் அவனுக்குப்பக்குவம் வாராமலிக்கும் போது ''சிவோஹம்'என்று எப்பொழுதும்பக்குவம் வந்தவர்களைப் போல வாயால் உச்சரித்து லோகத்தை பிரமிக்கச்செய்து வந்து கொண்டிருந்தான். இதையறிந்த ஆசாரியாள் இவன் இம்மாதிரி இருப்பது உண்மையான ஞானிகளிக்கு கெடுதலெனக்கருதி இவனைக் கூட்டிக்கொண்டு ஒருவழியாய் போகும்போது ஓர்சில்ப் பியின் உலையில் காய்ந்துகொண்டிருந்த ஜலரூபமான லோகத்தை சிவலோகமென்று ஆசாரியாள்குடித்துவிட்டார்கள்.இதைக்கண்ட சீடன் விழித்தான், நீயும் மீதியைச்சாப்பிடு எனவே சுவாமி முடியாதெனக்காலில்விழுந்து அனுக்கிரஹம்பெற்று உத்தமசிஷ்ய னுனன். ஆனதால் போலியான தொண்டர்களைக் கண்டுபிடித்து தக்கவிதமாக சாந்தமடையச் செய்யவேண்டியது முதல் வேலை.

காந்தியை உத்தம குருவாக நினைத்துப் பாவித்துவரும் தொண்டர்கள் தனியாக ''காந்தி உத்சவம்'' என்று ஒன்று

இரண்டு வாரங்கள் தனுதிகளினால் நன்கு நடத்தவேண்டியதுதான் உத்தமமான அபிமான பக்தியின் இலட்சணமாகும்.

இவ்விதம் செய்தால் யாருக்காவது தடையுண்டோ, ஈசனுடன் மனிதனைச் சேர்க்கப்போகுமிடத்தில் தான் இந்தவாதமும் ஹிம்சையும் உண்டாகிறது. இதனாலேயே ஈசனைத் தனியாக பய பக்தி விசுவாசத்துடன் ஆராதித்து வரவேணுமென்று நியமம் பிறந்திருக்கிறது. தொண்டர்கள் யாவருக்கும் பக்திசெய்துவர பகவான் பக்வபுத்தி யளிப்பாராக. சுபம்.

தர்மஸாரம். 2

"நல்ல காரியத்தினின்றும் ஏமாந்துவிடாதே" என்ற கருத்தைவிளக்கும் தைத்திரீயோப நிஷத்துவாக்கியமானது, நன்மையினின்றும் தவறாதே என்று ஆக்ஞைசெய்கிறது. நன்மை தீமை இவைகளை விசாரிக்குமளவில் சாஸ்திரமார்க்கம் நன்மையும் அதற்கு வித்தியாஸமான மார்க்கம் தீமையும் ஆகும். இஃதிவ்விதமிருக்க தற்கால நவீன மேதாவிகள் சாஸ்திர முறைப்படி நான்கு நாளாகச்செய்யவேண்டிய விவாஹத்தை ஒருநாள் கலியாணமென்று, சாஸ்திர மரியாதையைவிட்டு எதுவும் செய்யத் தலைப்பட்டு கிரஹஸ்தாசிரமத்தையே கெடுக்க முன் வந்துவிட்டார்கள். அவர்களுக்குப் பின்பாட்டுப்பாட அறைகுறையான சில சாஸ்திரிகளும் வைதீக தத்வத்தை நன்கு எடுத்துரைத்து சாஸ்திரப்படி நடத்திவைக்க சக்தியற்ற சில உபாத்தியாயர்களும் வெளிவந்திருக்கிறார்கள். இவைகளுக்கு அறியாமையே முக்கிய காரணம். கிரகஸ்தனுக்கு ஔபாஸானமே ஜீவன் அதைத்துடங்குங்காலம் விவாஹ சமயமாகும். எப்பொழுதாவது ஔபாஸனம் துடங்கினால் மூன்று காலமாவது செய்து வருதவரை அந்த ஔபாஸனம் உபயோகமில்லை என்று சாஸ்திரம் கூறுகிறது. இதற்கு விரோதமாக ஒருநாள் கல்யாணத்தில் ஔபாஸனத்தை ராத்திரி துடங்கி அடுத்த க்ஷணத்தில் அதை விட்டுவிட்டு கிரகஸ்தனுவதென்றால், அதற்கு சாஸ்திரமிடம் அளிக்கவில்லை. பலமற்ற ஔபாஸனத்தால் கிரகஸ்தன் என்ன குணமடைவான். கிரஹஸ்

தனுக்கு ஔபாஸனத்தில் முக்யமாக 'தேவ பிதுரு' கர்மங்கள் நடத்தவேண்டுமென்றும், அதனுல் மிக குணமடைவானென்று சாஸ்திரமிருக்க அதை மறுக்க யாருக்கு அதிகாரம். கல்யாண கோஷத்தால் வீண்சிலவைக் குறைக்கமுடியாத லௌகிக சிகாமணிகள் ஸகல சிரேயச்சுக்கும் காரணமாகிய ஔபாஸனத்தை தொலக்கிருர்களேதவிர வேறில்லை. எந்த சூத்திரத்திலாவது சாஸ்திரத்திலாவது இவ்விதம் செய்ய அநுவாதமிருக்கிறதா? நவீனர்கள் ஜாஸ்திச்சிலவைக்குறைக்க சாஸ்திரமார்க்கத்தைவிடுவதானது 'செருப்புக்குத்தக்கபடி காலை வெட்டுவது' என்பதற்கு ஒப்பாகிறது. ஒருநாள்கல்யாணத்திலும்நான்குநாள்சிலவுகள்யாவுமுண்டாகாமல் இருக்கவில்லை என்பது உண்மை. கல்யாண விஷயத்தில் தனத்தால் ஏற்பட்ட நஷ்டங்களைநிவர்த்திக்கவேண்டி ரிஷிகளின் சாஸ்திரமார்க்கங்களை விட்டுவிட்டால் அது எவ்விதம் தன் கஷ்டங்களை தீர்க்கும். சாஸ்திரம் நான்கு நாள்களும் ஔபாஸனம் நடத்திவந்து சேஷஹோமம் என்ற கிரியையும் நடத்தி முடிக்க வேண்டுமென்று சொல்வதே தவிற பணச்சிலவுகள் நடத்தச் சொல்லவில்லை. ரிஷிகள் டம்பம் மோகம் அகங்காரம் முதலிய குணங்களற்றவர்களானபடியால் அவர்களின் ஆசாரானுஷ்டானத்தில் தன நஷ்டம் வருவதற்கு சிறிதும் மார்க்கமில்லை ரிஷிகளின் மார்க்கமே சுகமடைய ஓர்சித்தஔடதமாகும். இதன் சாரங்களை நன்கறியாதவன் உலக மாயாயந்திரத்தில் அகப்பட்டுமோகங்கொண்டு டம்பச்சிலவுகளில் சிக்குண்டு தேனில் விழுந்த ஈயைப்போல கஷ்டப்பட்டு ஒன்றும்செய்ய முடியாதவனுய் ஔபாஸனத்தைக் கெடுக்கிருன்.

சாஸ்திரமார்க்கப்படி கிரகஸ்தனுய் 'தேவ,பிதுரு, கர்மங்கள் ஔபாசனத்தால்ச் செய்யவும் தேவபிதுருக்கள்' அதை ஒப்புக்கொள்ளவும் வேணுமானுல் அக்கினிக்கு சாஸ்திரப்படி நன்கு பல மிருக்கவேண்டும். சாஸ்திர மார்க்கத்தைத் தப்பி நடப்பது தெய்வ குத்தமாகும். தெய்வ ஆக்ஞையைத்தப்பிநடப்பவன்தெய்வ சிட்சையையடைவான் என்பது நிச்சயம். தெய்வ சிட்சையானது மனிதனுல் தாங்கமுடியாதென்பது சித்தம். ஆனதால் கூடியவரை சாஸ்திரமார்க்கத்தை விடாமலும், காலம், தேசம், சக்தி, இவைக்கு ஒத்தும் ஒருவாறு நடப்பதானது புத்திசாலித்தனமாகும். லௌகிகமான கோஷங்களைக் ஒருதினத்தில் முடித்துக்கொண்டு மீதி

மூன்று தினங்களில் அத்தியாவசிய பந்துக்களுடன் ஔபாஸனத்தை நடத்திவந்து நான்காவது தினத்தில் சேஷ ஹோமத்துடன் சமாப்தி செய்து பந்துக்களை நல்வரவு சொல்லியனுப்புவதானல் இதில் சாஸ்திர தப்பிதமும் வரமாட்டாது. டம்பமாக வீண் செலவுகளும் குறையக்கூடும். நவீனர்களின் அபிப்பிராயமும் இதனல் நிறைவேறும். ஔபாசநமும் பலமுள்ளதாகும். கல்யாணமும் தெய்வ சம்மதமாகும். அதனல் தெய்வகிருபையுமுண்டாகும் என்பதில் தடையில்லை. இம்மாதிரியாக லௌகிக வைதிக முறையை அனுஸரித்து நடத்தத்தக்கதான மார்க்கமிருக்கும்போது, வைதீகத்தை மாத்திரம் கெடுத்து இஷ்டப்படி நடப்பதானது மனிதனின் தர்மமாகா. ஏனெனில்! சாஸ்திரங்கள் மனிதனைக்கருதி ஏற்பட்டிருக்கிறதேதவிற பசு, பட்சி முதலிய பிராணிகளைக்கருதியல்ல. பசுக்களுக்கு பாப, புண்ணிய, அறிவு இல்லை. அதனல் அன்யனின் பயிரைத் தின்றுவிடுகிறது. அதையறிந்த சொந்தக்காரன் அதை சிட்சிக்கவெண்ணி பவுண்டிலடைக்கிறன். அந்த பசுவை வளர்ப்பவன் தன்பசு பவுண்டிலுள்ளதாக அறிந்து, அபராதமாக அதற்குச் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தித் பசுவைதிரும்ப கொண்டுவருகிறன். இனிமேல் பசுவை வெளியில் விட்டால் பணம் நஷ்டம் வருமென்று, அறிந்து பசுவைக்கட்ட சூட்சிக்கிறன். பசு பயிரைத்தின்ற வகைக்கு ஏன் மனிதனுக்கு அபராதம் வந்தது என்றல் பசுவுக்கு பகுத்தறிவு இல்லாததாலும், அதன் சொந்தக்காரனுக்கு அஃதிருப்பதாலும், மேலால் அது வாராமலிருக்க இவ்விதம் அபராதம் விதிக்கப்பட்டது. மனிதனுக்கு நல்லதைச்செய்யவும் கெட்டதை விலக்கவும் புத்தியிருப்பதால், பாபபுண்ணியங்களை அறிந்து தீமையிலிருந்து விலகி நன்மைபெற முயற்சிக்கலாம்.

மனிதனுக்குத்தான் வேதசாஸ்திரங்களும் தீர்த்தயாத்திரை தொடங்கிய தர்மானுஷ்டானங்களும் சொல்லப்பட்டிருக்கிறதே தவிற,புலி முதலியகெட்டமிருகங்களுக்கில்லை, புலியானதுபிராணி ஹிம்சை செய்கிறது அதற்கு ராஜதண்டனை உண்டா? இல்லை.மனிதனுக்குத்தான் விதிவிலக்குகள் ஏற்பட்டிருக்கிறது, மனிதன் தன் குற்றத்திற்கு ராஜதண்டனை பெற்றல், பிறகு தெய்வ தண்டனை இல்லை. இவ்வுலகில் குற்றத்திற்கு சிட்சை பெறுதவனுக்கு தெய்வ தண்டனையுண்டு அது அவசியமுமாம். தீயையறிந்தவனும்,பாம்பை

யறிந்தவனும்" அதைவிட்டு விலகி நடப்பது போல பாபத்தையறிந்தவன் அதைவிட்டுவிலகிநடப்பான். இவ்வுகலமே சத்யம் வேறு லோகமில்லை என்று நினைப்பவர் அடிக்கடி என்வசமகப்பட்டுக் கொள்ளுகிறு,, னென்று தர்மராஜன் கடோப நிஷத்தில் வெளியிட்டிருக்கிறுர். ஆகையால் சாஸ்திரப்படி நடப்பது மனிதனின் கடமையாகும் என்பது சித்தம். இதில் நவீன மேதாவிகள் விதி மார்க்கம் தப்பி நடப்பதும் தவிர, இம் மார்க்கம் தான் இக்காலத்திற்குசிதமெனசாதுரிய மொழிபேசிதங்களது தப்பிதநடையை மறைத்து சாதுக்களை ஏமாற்றிவருகிறுர்கள். அதுஎதுபோலெனில் சாதகப்பறவையானது மழைபெய்யும்போது தன்தலையை உயரத் தூக்கி தன்வாயை மெற்புறமாகச் சாய்த்துக்கொண்டிருக்குமென்பதும் அப்பொழுது அதன்வாயினுள்விழுகிற மழைஜலத்தை பருகி தாகசமனம்செய்து கொள்ளும் என்பது உலகமறிந்த விஷயம். இச் சாதகப்பறவையைக்கண்டு மற்றும் சில பரவைகள் நண்பனே! பூமியில்எவ்வளவோ குளம்,குட்டை,கிணர் நதி,முதலிய ஜலாசயங்களிருக்க நீ என் வீணுக துன்பம்அடைகிறுய் என்றன இதைக்கேட்ட ஜாதகம் பூமிலுள்ள ஜலங்கள் அசுத்தமும் புளிப்புள்ளதும், நிந்திக்கத் தக்கதும், ஆனது பற்றி நான் சுத்தமான பொருளை அங்கீகரிப்பதன்றி உங்களைப்போல அசுத்தபதார்த்தத்தை ஒருபோதும் கையாளுவதில்லை என விடையளித்தது இது போலவே சில மனிதர்களும் தங்களால் ஆதரிப்பதற்கும் அனுஷ்டிப்பதற்கும், அசாத்தியமெனத் தோன்றும் தர்ம ரகசியங்களையெல்லாம்பயனற்றதாகத்தள்ளிவிடுகின்றனர் சாதகம் தன் கழுத்தில் ஈசனுல் அமைக்கப்பட்டிருக்கும் துவாரத்தை உள்ளபடி சொல்லி உங்களைப்போல ஜலமருந்த சாத்தியமில்லையாகையால் இவ்விதமருந்தினேனென்று உண்மைசொல்ல வேண்டியிருக்க பூமியிலுள்ள தண்ணீர் அசுத்தம், புளிப்பு, நிந்திக்கத்தக்கதுஎன்றுபல குற்றங்களைக்கற்பித்துத் தனக்கு பெருமைசம்பாதித்துக்கொள்வதர்க்காக சாதுர்யமாக மொழிந்ததுபோல சில நவீன புத்திமான்கள் தங்களுக்கு அறியாததும் முடியாததுமாகிய சகல தர்மத்தையும்கைவிட்டுவிட்டதிஞல்எங்களுக்கு ஏதோ சில விசேஷ யோக்கியதை, குணம், இவைகள், உண்டாய்விட்டதாக நினைத்துக்கொள்கிறுர்கள். இது அவர்களின் அதர்மச்செயலை வெளியிடுவதாகிறது. அதுபோலவே ஏதோ சிலர்கள் கூடி புராதன

தர்மானுஷ்டானங்கள் கஷ்டமெனக்கண்டு அதில் பல தோஷ மிருப்பதாகவும் பல குணமுள்ள புது மார்க்கம் கண்டு பிடித்திருப் பதாகக்கருதி ஒருநாள் கலியாணமே உலக க்ஷேமம் என்று வாதா டுகிறார்கள். இவர்களுக்கு தர்மோபதேசம் செய்வோ மென்றால் கறையான் நிறைந்ததோர் புற்றில் விலையுயர்ந்த பட்டுவஸ்திரங்களை எவ்வளவு பந்தோபஸ்து செய்து வைத்தாலும் அவை கறையா னுக்கிரையாகுமே யன்றி சிறிதும் மீந்திரா. அதுபோல ஆசை மோகம், குதர்க்கம், இவைகளாலும்' துராசாரங்களாலும் நாஸ் திகத்தாலும் குழம்பினமனதில் விலையற்ற நல்லுபதேசச் செல் வத்தை எவ்வளவு சேகரித்துவைத்தாலும் உபயோகமின்றி வீணு கிறது. தவிறவும் கிழிந்த இலையில் உயர்ந்தபால் வார்த்த அன் னத்தை விட்டால் அது சிறிதும் தங்காது ஓடிவிடுமேயன்றி அதனை உட்கொள்ள சாத்தியமில்லை. அது போல யாதொரு நியமுமில்லாதமனிதனுக்கு எவ்வளவு சன்மார்க்கநீதிகளை உபதே சித்தாலும் இவை வீணாகுமேயன்றி அவைகளின் குணங்களை ஏற்று அனுபவியான்.

மான்னியர்களே! சாஸ்திரசார மென்னவெனில் சாஸ்திரமே ஈசனது ஆஞ்ஞை" அதுவே தர்மம் அதுவே நன்மை அதையனுச ரித்து நடப்பதே மனிதனின் கடமைமனிதனுக்காகவேதசாஸ்திரம் பிறந்திருக்கிறது. அறியாத்தனம், நாஸ்திக்கியம், இவைகளின் முயற்சியால் சாஸ்திரமார்க்கத்தை விட்டுநடப்பது பகவதாக் ஞைக்கு விரோதமாகையால் நன்மையைக்கருதி சன்மார்க்கத்தை நாடி சகல க்ஷேமலாபங்களையும்பெற்று சுகமடைவோமாக. சுபம்.

எஸ். சங்கரராம சர்மா,

நடேசஸ்துதி.

(621-வது பக்கத்தொடர்ச்சி)

यः प्राहस्म समत्वमेव मखिभिः स्वीयांघ्रिपूजारतैः
स्वस्यैवाचकथत्तथानटपति स्स्वस्यापितेष्वेकताम् ।
नित्यं तद्द्विजपूजयैव मुदितो यःप्रीणयत्याश्रितान्
सोयं सर्वपुमर्थदांघ्रिकमलः श्रेयांसि पुष्णातु नः ॥

தம்முடைய சரணபூஜையிலேயே ஆசையுடையவர்களான தீக்ஷிதர்களோடு தம்மையே சமமாகவும் அவர்களோடு தம்மை ஒருவராகவும் கூறுகிற அந்த தீக்ஷிதர்களுடைய பூஜையினாலேயே சந்தோஷமடைந்து பக்தர்களை திருப்திசெய்கிற ஸகல புருஷார்த்தங்களையுந்தருகிற திவ்ய சரணகமலமுடைய நடராஜமூர்த்தி நமக்கு மங்களங்களை விருத்திசெய்யட்டும். ஸ்துதிகர்த்தா இந்த சுலோகத்தினால் சிதம்பர மகாத்மியத்திலுள்ள மூன்று ச்லோகார்த்தங்களை பிரகாசித்திருக்கிறார். 5-வது அத்தியாயம், (௧)

सुदक्षिणै र्महायज्ञैः तर्पयन्तस्सदासुरान् ।

अकृत्रिमेण चित्तेन मम पूजां प्रकुर्वते ॥

நல்ல தக்ஷிணைகள் பொருந்திய பெரிய யாகங்களால் எப்பொழுதும் தேவர்களை திருப்தி செய்விக்கின்ற தீக்ஷிதர்கள் நிர்மலமனஸ்ஸோடு என்னை பூஜிக்கின்றார்கள்.

समोहमेक एवास्मि नास्त्यन्यो भुवनत्रये ॥

அவர்களோடு நான் ஒருவனே சமமானவன் வேறுசமமுள்ளவர் மூன்று உலகத்திலும் கிடையாது.

शुद्धान्वयानामेतेषां ज्वलत्पावकरोचिषाम् ।

अहमेकः त्रिसाहस्रसंख्यासंख्यातिपूरकः ॥

சுத்தவம்சத்தில் ஜனித்த ஜ்வலிக்கின்ற அக்கிபோன்ற பிர்மதேஜஸ்ஸையுடைய இந்த தில்லைவாழந்தணர்களுள் ஒருவனான நான்மூவாயிர ஸங்கியை பூர்த்தி செய்கிறேன். ஸ்ரீ சிற்சபேசருடைய ஆஜ்ஞையினால் பிரமதேவருடைய யாகத்துக்காக போயிருந்த மூவாயிர தீக்ஷிதர்களை அந்தர்வேதி என்கிறகங்காதீரத்திலிருந்து ஹிரண்யவர்ம சக்கிரவர்த்தி ரதங்களிலேற்றி சிதம்பர க்ஷேத்திரமழைத்துவந்து வியாக்கியபாத மஹர்ஷியின்பொருட்டு எண்ணிக்காண்பிக்கும் ஸமயம் ஒன்றுகுறைய மிகக்கவலையடைந்தபொழுது ஸ்ரீ சபாநாதர் முகமலமிருந்து வந்த ச்லோகமிது. இந்த இதிஹாஸத்தின் விரிவை சிதம்பர மகாத்மியம் 24-வது அத்தியாயத்தில் காண்க.

चित्सभामध्यगन्तेजः चिन्तितार्थप्रदायकम् ।

चिदानन्दसदाकारं चिन्तयामो वयं सदा ॥

சிற்றம்பலத்தின் நடுவில் விளங்கும் பக்தஜன மனோரதங்களை பரிபூர்த்திசெய்யும் சச்சிதானந்த மூர்த்தியை நாம் சதா த்யானஞ் செய்கிறோம்.

भद्रमद्रीन्द्रजाजानि स्तनोतु तनुचन्द्रभृत् ।
सर्वविद्यानिधिर्देवः प्रणवात्मसभेश्वरः ॥

பார்வதிபதியான சந்திரகலாதாரியான சர்வ வித்தியாதிபானப்ரணவஸ்வரூபியான சபாநாயகர்மங்களங்களை கொடுக்கட்டும்.

यस्त्र्यय्यन्तवचःप्रमेयपरमप्रेमास्पदानन्दकृत्
प्रत्यक्तत्त्व मुपादिदेश गुरुराड्रूपो मुनिभ्यः प्रभुः ।
यस्तत्तत्त्वमनन्तहर्षजनको नृत्येनचावेदय
त्सुत्रामादिसुपर्वणो मुनिगणान् वन्दामहे तं मुहुः ॥

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ரூபியாயிருந்து ஸநகாதி மகர்ஷிகளின் பொருட்டு வேதாந்த வாக்ய கம்யமான பரமாநந்தகரமான அத்வைத தத்வத்தை உபதேசித்த ஆனந்த நடராஜ ரூபியாயிருந்து தாண்டவத்தினாலே இந்திராதி தேவர்கள்பொருட்டும் மஹர்ஷி கணங்கள்பொருட்டும் மேற்கூறிய தத்வார்த்தத்தை உபதேசித்த பிரபுவை அனேகந்தடவை நமஸ்கரிக்கின்றோம்,, இந்தச்லோகத்தின் பொருள் விரிவை சூதஸம்ஹிதை முக்திகண்டம் 8-வது அத்யாயத்தில் காண்க. இதன் ஸாரத்தை ஸ்ரீ காளிதாஸ மஹாகவி மாளவிகாக்நி மித்ர நாடகத்தில் முதலங்கத்தில்

देवानामि दमामनन्ति मुनयः कान्तंक्रतुं चाक्षुषं
रुद्रेणेदमुमाकृतव्यतिकरे स्वाङ्गेविभक्तंद्विधा ।
त्रैगुण्योद्भवमत्रलोकचरितं नानारसंदृश्यते
नाट्यं भिन्नरुचेर्जनस्य बहुधाप्येकं समाराधनम् ॥

என்கிற பத்யத்தால் மிக ரஸமாக போதித்திருக்கிறார். பின் ஒரு சமயம் இதை விரித்துரைப்போம்.

यस्मादेव जगद्बभूव निखिलं येनैवसंधार्यते
यस्मिन्नेव लयं प्रयाति निगमैर्गम्यश्च यस्सर्ववित ।
यो वानन्दघनः स्वयं विजयते स्वानन्दयन्देहिनः
नृत्तेशं तमहं प्रणौमि गिरिजाप्राणेश्वरं सर्वदा ॥

சகல ஜகத்துக்களுக்கு ஸிருஷ்டிகர்த்தரும் சம்ரக்ஷகரும் சம்ஹார கர்த்தரும் வேதங்களால் அறியத்தகுந்தவரும் எல்லாமறிந்தவரும் ஆனந்தரூபியும்சகலப்ராணிகளையும்ஆனந்திக்கச்செய்கிறவரும்பார்வதி தேவியின் ப்ராணநாயக நடநாயகரை எப்பொழுதும் நமஸ்கரிக்கின்றேன்!! எவரிடமிருந்து இந்த பிரபஞ்சம் உண்டாயிற்றோ, எவரால் ஜீவிக்கிறதோ, எவரிடம் லயிக்கிறதோ, அந்தஸ்வரூபத்தை அறிந்துகொள்ளு,, என்று பிர்ம்மத்தின் தடஸ்த லக்ஷணத்தையும், ஆனந்தயேபிர்மஸ்வ ரூபமென்று அறிய வேணுமென்று பிர்மத்தின் ஸ்வரூப லக்ஷணத்தையும் தைத்திரீயோபநிடதம் பிருகுவல்லியில்கூறுகின்றதன்றோ. இங்கு அதையே நிரூபித்திருக்கிறார்.

(தொடரும்)

சிதம்பரம் ராஜா ஸோமசேகரதீக்ஷிதர்.

காயத்ரீஜப விஷயம்.

காயத்ரீஜப விஷயத்தில் ஆர்யதர்ம மூலமாகிய சில ஆக்ஷேபங்களுக்கும் ஸந்தேகங்களுக்கும் ஸமாதானங்களை அவச்யம் தெரியப்படுத்த வேண்டுமென்று சிலருடையவேண்டுகோளை அனுஸரித்து இதுவிஷயத்தில் கொஞ்சம் யதாமதி தெரிவித்துக் கொள்ளுகிறேன். வாக்ய பஞ்சாங்கங்களிலும் திருக்கணித பஞ்சாங்கங்களிலும் நாளது ப்ரஜாபதிஸு-ஆவணிமீ -12உ வெள்ளிக்கிழமை பௌர்ணமாஸி புச்சமும் 13உசனிக்கிழமை பிரதமைபுச்சமும் இருப்பதால்ப்ரதமையில்விதிக்கப்பட்ட காயத்ரீஜபம்என்றையதினம்செய்வது சாஸ்திரீய மாகும் என்கிற ஸந்தேகம்ஏற்படுவ

தற்கு இடமேற்பட்டது. இவ்விஷயத்தில் வைத்யநாததீக்ஷிதீய வர்ணாச்ரம காண்டத்தில்:—

> संधिस्सङ्गवतः पश्चादर्वाङ्मध्यन्दिनाद्यदि ।
> तत्रैवोपाकृतिं कुर्यात्सद्यश्च समिदाहुतिः ॥
> संधिस्सङ्गवतः प्राक्चेत्पूर्वस्मिन्पर्वणिक्रिया ।
> श्वोभूते समिदाधानमेष श्रावणिको विधिः ॥

என்கிற வசனங்களால் நிர்ணயம் செய்யவேண்டியிருக்கிறது. ஸங்கவகாலத்திற்குப்பிறகு மத்யந்தினத்திற்குமுன் பௌர்ணமாஸிப்ரதமைகளின் சேர்க்கைஏற்படுமானால் அன்றையதினமேஉபாகர்மாவும்காயத்ரீ ஜபமும் அனுஷ்டிக்கப்படவேண்டுமென்றுமுதல் சுலோகத்தின்கருத்து. அவ்விதம் இவ்வருஷம் ஸங்கவகாலத்திற்குப் பிறகு ஷ்டி ஸந்தி ஏர்ப்படாததால்வாசனிகமாக இப்பொழுது இந்த வசனம் நிர்ணயமாகஇல்லாவிடினும் வசனஸ்வாரஸ்யத்தினால் நிர்ணயம் பண்டிதர்களுக்கு ஸ்பஷ்டமாக ஏற்படுமென்பதில் ஸந்தேகமில்லை அதாவது மத்யந்தினத்திற்கு முந்தி பர்வப்ரதிபத்ஸந்தி ஏற்பட்டால் அன்றைய தினமே காயத்ரீ ஜபம் செய்யவேண்டுமென்று விதியிருப்பதால் முதல் நாள் ஸங்கவகாலத்தில் ப்ரதமை இல்லாவிடினும் அன்றைய தினமே காயத்ரீ ஜபம் செய்யவேண்டியது.

மறுநாள்ஸங்கவகாலம் பூராவாகப்ரதிபத்வ்யாப்தி இருந்தாலும் அன்றையதினம்செய்யக்கூடாதென்பது ஷ்டி வசனத்தால் நன்றாகத்தெளிவாகிறதல்லவா, ஆனால் இரண்டாவது ச்லோகத்தின்படி ஸங்கவகாலத்திற்கு முன் ஸந்தி ஏற்பட்டால் முதல்நாள் உபாகர்மாவும் மறுநாள் காயத்ரீ ஜபமும் செய்யவேண்டியது என்றிருப்பதால் இவ்வருஷம் சனிக்கிழமை செய்யலாமென்று நினைத்தால் அது முற்றிலும் ஸரியல்ல. மறுநாள் என்பதற்கு முதல்நாள் உபாகர்மமும் மறுநாள் காயத்ரீஜபமும் என்று அர்த்தமேயொழிய என்றைதினம் ஸந்தியோ அதற்கு மறுநாளென்று அர்த்தமல்ல. ஆகையால் வெள்ளிக்கிழமைதினமே செய்யவேண்டியது என்பது ஸ்பஷ்டம். பின்னும் ஸங்கவகாலத்திற்கு முன் ஸந்தி ஏற்பட்டால் இந்தவசனத்தை உபயோகிக்கலாம். ஸங்கவ

காலம் வந்தபிறகு இவ்வருஷம் ஸந்தி ஏற்பட்டிருப்பதால் ஷ்டி வசனம் உபயோகப்படாது. பின்னும் நன்றாக கவனிக்கும் பக்ஷத்தில் औदयिकेसंगवस्पर्शे என்கிற இடத்தில் ஸங்கவ சப்தத்திற்கு ஸங்கவாந்தம் என்று வைத்யநாத தீக்ஷிதர் அர்த்தம் செய்திருப்பதால் இவ்விடத்திலும் அவ்விதம் முதல் ச்லோகத்தில் ஸங்கவாந்தத்திற்குப்பிறகு மத்தியந்தினத்திற்கு முன் என்று அர்த்தம்செய்யவேண்டியது ஸர்வஸம்மதமானதால் இரண்டாவது ச்லோகத்திலும் அவ்விதம் ஸங்கவாந்தத்திற்கு முன் என்றே அர்த்தம் ஏற்படுமாதலால் அதன்படியும் இவ்வருஷம் வெள்ளிக்கிழமைதினமே நிச்சயிக்கப்படுகிறது. அவ்விதம் அர்த்தம் செய்யாவிடில் ஸங்கவகாலத்திற்குப் பிந்தியும் முந்தியும் பர்வ ப்ரதிபத் ஸந்திவருங்காலத்தில் க்ரமமாக இவ்விரண்டு வசனங்களும் நிர்ணயங்களாக ஆனாலும் ஸங்கவகாலத்தில் ஷ்டி ஸந்தி ஏற்பட்டால் எவ்விதம் செய்யவேண்டியது என்கிற ஸந்தேகத்திற்கு ஸமாதானம் ஏற்படாமல் போகும். பின்னும் காயத்ரீ ஜபத்தை போல்ப்ரதமைதினமேவிதிக்கப்பட்ட,தர்சபௌர்ணமாஸ இஷ்டிகள் விஷயத்தில் நிர்ணயம்செய்ய இதே வசனம் திதி நிர்ணய காண்டத்தில் உபாகர்ம காயத்ரீஜபம் என்கிற பெயரை மாத்திரம் மாற்றி இஷ்டி என்கிறபெயரைச் சேர்த்துக் காணப்படுகிறது.

पर्वप्रतिपदोस्संधिरर्वागावर्तनाद्यदि ।
तस्मिन्नहनि यष्टव्यं पूर्वेद्युस्तदुपक्रमः ॥
आवर्तनात्परस्संधिर्यदि तस्मिन्नुपक्रमः ।
परेद्युरिष्टिरित्येष पर्वद्वयविनिश्चयः ॥

இந்த வசனங்களும் உபாகர்ம காயத்ரீஜப விஷயத்தில் கீழே உதாஹரிக்கப்பட்ட வசனங்களும் ஒரேவிதமான அர்த்தமுள்ளதாகயிருப்பதால் ப்ரத்யபிக்ஞா ப்ரமாணத்தால் தர்ச பௌர்ணமாஸ இஷ்டிகளைப்போல் மத்யந்தினத்திற்கு முன் ஸந்தி ஏற்பட்டால்அன்றையதினமே செய்யவேண்டுமென்றும்மத்யந்தினத்திற்குப்பிறகு ஏற்பட்டால்மருநாள்செய்யவேண்டுமென்றும்நிர்ணயம் ஏற்படுகிறது, ஸங்கவகாலத்திற்குப்பிறகு ஷ்டி ஸந்தி ஏற்பட்டாலும் அன்றையதினமேசெய்யவேண்டுமென்று வசனம்சொல்லும்

பொழுது அதற்கும் முந்தி ஸங்கவகாலத்தில் இவ்வருஷம் ஸந்தி ஏற்பட்டிருப்பதில் ஸந்தேஹத்திற்கு கொஞ்சமேனும் இடம் ஏது? ஆகையால் கைமுதிகந்யாயத்தாலும் இந்த தீர்மானம் திருடப் படுகிறது. பின்னும் முன்சொன்ன வசனங்களில் மத்தியந்தினத் திற்கு முன் ஸந்தி ஏற்பட்டால் மறுநாள் ப்ரதமை எவ்வளவு நாழிகை இருந்தபோதிலும் அதை கவனியாமல் முதல் நாளே காயத்ரீ ஜபம் செய்வதை வற்புறுத்திருப்பதால் ஷ்டி திதிகளை நான்காக விபாகம்செய்து அதில் பௌர்ணமாஸியின் கடைசி யான நான்காவது பாகமும் ப்ரதமையின் முதல் மூன்றுபாகங்க ளும் காயத்திரீஜபத்திற்குக் காலமென்றும் ப்ரதமையின் நான் காவது பாகம் ச்லாக்யமல்லவென்றும் ஸூசிப்பிக்கப்பட்டிருக் கிறது. இவ்விஷ்பமானது இஷ்டிப்ராகாணத்தில் ஸ்பஷ்டமாகவே யக்ஞபார்ச்வ வ்ருத்தசாதாதப காத்பாய நாதிமஹர்ஷிவசனங்க ளால் நன்று வெளியாகிறது. யக்ஞபார்ச்வ:—

पञ्चदश्याः पर. पादः पक्षादेः प्रथमास्त्रयः ।
कालः पार्वणयोगे स्यादथान्ते तु न विद्यते ।
पर्वणो यश्चतुर्थांश आद्याः प्रतिपदस्त्रयः ।
यागकालस्सविज्ञेयः प्रातरुक्तो मनीषिभिः ॥

कात्यायानः—

न यष्टव्यं चतुर्थांशे यागैः प्रतिपदः क्वाचित् ।
रक्षांसि तद्विलुंपन्ति श्रुतिरेषा सनातनी ॥ इति ॥

இந்த வசனங்கள் ப்ரதிபத்தின் நான்காவது பாகத்தில் செய்யும் இஷ்டியை ராக்ஷஸர்கள் அபஹரிக்கிறார்கள் இது ஸநாதனமான வேதத்தின் நிர்ணயமென்று ஷ்டி பாகத்தை விட்டு மற்றபாகங்க ளில்தான் செய்யவேண்டுமென்று நிரூபிக்கும் முகமாய் ப்ரதமை யில் விதிக்கப்பட்ட ஜபஹோமாதி தேவகார்யங்களுக்கு ப்ரதமை யின் நான்காவது பாகம் நிஷித்தம். அந்தகாலத்தில் செய்யப்ப டும் கர்மாக்கள் ராக்ஷஸர்களுக்குச் சேரும் என்பதை தெரிவிக் கிறபடியால் முதல்நாள் வெள்ளிக்கிழமை செய்வதே உறுதி யாகிறது. ஆகையால் இவ்விஷயத்தில் முதல்நாள் விதிக் கப்பட்ட 'உபவாஸம் காயத்ரீ ஜபத்திற்கு அங்கமானதால்

एषश्रावणिकोविधिः என்கிற வசனத்தால் ப்ரதானமான காயத்ரீ ஜபம்என்றையதினம் செய்யவேண்டியதோ அதற்கு முதல்நாள் உபவாஸம் ஸித்தமாகும். ஆகையால் இவ்வருஷம் காயத்ரீ ஜபத்தை ஆவணிமீ" 12உ வெள்ளிக்கிழமை செய்யவேண்டுமென்பது ஸித்தாந்தம்.

இவ்விஷயத்தில் அபிக்ஞர்கள் முற்றிலும்கவனித்து மற்றுமுள்ள ரகஸ்யங்களைத்தெரிவித்தால் சிரஸ்ஸால் அங்கீகரிக்கஸித்தமாக இருக்கிறேன்.

போலகம் சுந்தரேசசாஸ்திரி.

குறிப்பு:—காயத்ரீஜப நிர்ணயம் அடுத்த ஸஞ்சிகையில்.

ஓர் கண்டனக் கூட்டம்.

14-ந்தேதி மாலே சீர்காழிக்கடுத்த சுவேதாரண்யம் என்னும் க்ஷேத்திரத்தில் பிரும்மஸ்ரீ நாராயணயஜ்வா அவர்கள் தலைமையின் கீழ் சென்னையிலிருந்துவந்த ஸ்ரீமான் வே. ஸோமதேவசர்மா அவர்கள் சாரதா சட்டத்தின் தீங்கை எடுத்துரைத்து வைதிக விஷயங்களை சட்டசபையில் கொண்டுவந்து பலாத்காரமாக ஆஸ்திகர்களை நிர்ப்பந்தப்படுத்துவது அடாதகார்யமெனக்காட்டி ராஜாபகதூர் கிருஷ்ணமாசாரியார் கொண்டுவரும் திருத்தச்சட்டத்தை ஆமோதிப்பதாக ஓர் தீர்மானம் நிறைவேற்றி ராஜப்பிரதிநிதிக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் அனுப்பினர்.

V. நாராயணன்.

விளம்பரம்.

ஸ்ரீ குரு ராகவேந்திரஸ்வாமிகள் ஆராதனை ஸபா
அக்ரஹாரம் பண்ட்ருட்டி

ஷை ஸபா மெம்பர்களின் ஆதரவின் கீழ் பிரதிவருஷம் போலவே இவ் வருஷத்திலும் அதாவது ஷை ஸ்வாமிகளின் புண்யதினமாகிய சிராவண பஹுளத்விதீயை பானுவாரம்

30-8-31ல் ஷ ஸ்வாமிகள் ஆராதனை மஹோற்சவத்தை நடத்தி வைப்பதாக நிச்சயித்து இவ் வருஷத்திய மஹோற்சவப் பத்திரிகையுடன் சென்ற ஷூ வத்திய ஸபாரிபோர்ட்டையும் ஸபா அங்கத்தினர்களுக்கும் ஏனைய பக்தர்களுக்கும் அனுப்பி வருகிறது.

ஆனதால் எல்லா அன்பர்களும் மிக்க ஆதரவு செய்து விமரிசையாய் நடத்திவைத்து ஸ்ரீஹரி குரு பூர்ண அனுக்கிரஹத்திற்கு பாத்திரர்களாகவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்

R. ரகூத்தம ருவ்.

வாரவிருத்தாந்தம்.

சென்னையிலும் பரவுகிறது:—ஹிந்து முஸ்லீம் சண்டை வடநாட்டில்தான் விசேஷமாக இருக்கும். ஒரு மஹம்மதியர் ஸமீபத்தில் சென்னை மாகாணத்தில்வந்து அவர் மதத்தையும் மதாபிமானத்தையும் உபதேசித்தார். அதன்பலனே இது எனப்பலர் அபிப்பிராயப்படுகின்றனர். வேலூரில் ஷ சண்டைநடந்தடங்கியது. 17உ சென்னையில் ஓர் மாரியம்மன் ஊர்வலம் வரும்போது மசூதியிலுள்ள பலர் தடியுடன்தாக்கி அம்மன் விக்ரஹத்திற்கும் ஆலயத்திற்கும் பங்கம் செய்தனர், ஏற்கனவே இவர்கள்முன் ஏற்பாடுடன் இருந்ததாகத் தெரிகிறது. நல்லகாலமாக தலைவர்களும் அரசாங்கமும் தக்க முயற்சிசெய்து அடக்கினர் முஹம்மதியர்களதுமுரட்டுத்தனத்தை அவர்மதக்குருக்கள் அடக்க முயன்றாலன்றி பயனிரா.

இவரே அரசன்:—பரோடா ஸமஸ்தானத்தில் போலீசார் மேலிடத்து உத்திரவுபெறாமல் ஏதோ காரணங்கொண்டு குடிகளை தடியாலடித்தாராம். இதைத்தக்கபடி விசாரித்து குற்றவாளிகளைத்தக்கபடி சிக்ஷிப்பதாகவும் குடிகள்முன்போல்ஸமாதானமாக வாழும்படி அரசர் வேண்டுகிறார், "ராஜாப்ரகிருதிரஞ்ஜனாத்" என்று கவி சக்ரவர்த்தி காளிதாஸன் சொற்படி குடிகளை அன்புடன் பரிபாலிக்கும் விஷயத்தில் இவரை இச்சமயம் கொண்டாட வேண்டும். ஆனால் சில ஆசாரசீர்திருத்தக்காரர் கொள்கையை ஆதரித்து விதவா விவாஹ சட்டத்தைக்கொண்டு நிறைவேற்றியதற்கு அவரை கண்டிக்காமலிருக்க முடியாது,

என்னகதி அடைவானே:-கள்ளவகுப்பைச்சார்ந்தஇருவர்கூடி காரைக்குடி கோவில் விக்ரஹத்தின் தங்க கவசத்தைக்களவாடி ஒருவன் அகப்பட்டான். திருடே மிக பாபத்தொழில். அதிலும் ஆலயத்தில் பகவானது பொருளை அதிலும் ஸ்வர்ணஸ்தேயமென்ற மகா பாபத்தைச்செய்தவன் எக்கதியடைவான் என ஆஸ்திகருக்குத் தெரியாததல்ல. ஒவ்வோர் கிருமத்திலும் ஆஸ்திகர் ஓர் சபைக்கூட்டி ஏதாவது தர்மத்தைப் புகட்டும் புராணங்களை உபந்யஸிக்கச்செய்வரேல் இத்தொழில் கொஞ்சம் குறையுமன்றோ ?

தர்மத்தை மதிக்கவேண்டாமா? தூத்துக்குடியில் காந்தி கூட்டத்தார் பகவான் வீற்றிருக்கும் ரதத்தின்மீதேறி தேசியக் கொடி நாட்டவும் தொடத்தகாதவர் தேர்மேலேறி ஆஸ்திகர் மனதை புண்படுத்தவும் ஆரம்பித்து ரதம் ஓடவிடாமல் பல தொந்தரவு செய்ததாக போலீசார் சிலர்மேல் வழக்குத்தொடங்கியிருக்கின்றனர். முடிவுகாலத்திற்கேற்கவே நடக்குமோ என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திருக்கூட்டத்தார் அடக்கமுள்ளவர் ஸத்யத்தை அவலம்பித்தவர் பொறுமையுள்ளவர் எனக்கூறிக் கொள்கின்றனர். இவ்வளவு ஆஸ்திக மகாஜனங்கள் மனம் புண்பட பகவான் ஏறிய தேரின்மேல் ஏறியது நியாயமா ?

அதுசோற்படி நடக்கலாகாதா? ஸ்ரீ காந்தி ரௌண்ட்டேபிள் ஸபைக்காக சீமைசென்று ஸ்வராஜ்யம் கொண்டுவரப்போவதாக பலர் மனப்பால் குடித்தனர். முடிவில் அவர் போகவில்லை. நான் போக பூர்ண ப்ரயத்தனம் செய்தேன். நானிங்கிருப்பது உசிதம் என்பது தெய்வஸங்கல்ப்பம்போலும். என்னை தைவமே நிறுத்திவிட்டதெனக் கூறுகிறார். ஆனால் அத்தைவம் காட்டிய வேதத்தின் கருத்துப்படி நடக்க முன்வருவதில்லை. தன் புத்தியில் பட்டது வேதம். அதைத் தழுவுவதே கர்மம் எனக்கூறுபவரைநாம் எப்படித்திருப்புவது? அவர்சிஷ்யகோஷ்டி இதைகவனித்து தேசத்திற்கு அநுகூலமானதும் மதத்திற்கு விரோதமில்லாததுமான கார்யங்களையே மேல்கொள்ளவேண்டும்„

வே. ஸோமதேவ சர்மா